

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில் 97 பயனாளிகளுக்கு ரூபாய் 26 இலட்சத்து 26 ஆயிரம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப்குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கோ.தவச்செல்வம், மாவட்ட ஊராட்சிதலைவர் த.இராஜேந்திரன், துறையூர் நகராட்சி ஆணையர், நகராட்சி பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருச்சி கிழக்கு மாநகர தி.மு.க. சார்பில் கலைஞரின் புகழ் பாடும் கருத்தரங்கம் திருச்சி கரூர் பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கருத்தரங்கில் மாநகரக் கழக செயலாளர் மு.மதிவாணன் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சிக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சரும், தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், கருத்தரங்கை கவிப்பேரரசு வைரமுத்து தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். கருத்தரங்கில் அரசியலில் கலைஞர் என்ற தலைப்பில் தி.மு.க. தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில பொதுச் செயலாளர் தோழர் மகேந்திரன் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் சிந்தனை செல்வன், ம.தி.மு.க. மாநில பொருளாளர் செந்திலதிபன். மனிதநேய மக்கள் கட்சி மாநில பொது செயலாளர் அப்துல் சமது எம்.எல்.ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர். முடிவில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் நன்றி கூறினார். கருத்தரங்கில் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### கருத்துரிமை காத்திட, நெருக்கடிகள் தகர்த்திட

# நமக்கு வழிகாட்டுபவை கலைஞரின் எழுத்துகள்!

## ‘கலைஞர் திரை இசைப் பாடல்கள்’ நூல் வெளியீட்டு விழாவில் கனிமொழி கருணாநிதி உரை!

**சென்னை, ஜூலை 23 -**

**முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, நேற்று முன்தினம் (20.07.2024 - சனிக்கிழமை), சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் அரங்கத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கவிஞர் நெல்லை ஜெயந்தா தொகுத்த, “கலைஞர் திரை இசைப் பாடல்கள்” நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.**

**விழாவில் கலந்துகொண்டு, நூலை வெளியிட்டு, விழா பேருரையாற்றினார் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

“தலைவர் கலைஞர் அவர்களின் பாடல்களுடைய தொகுப்பு வெளிவராமல் இருந்த ஒரு சூழ்நிலையிலே… இப்படி ஒரு புத்தகத்தை கொண்டு வர வேண்டும் என்ற முனைப்போடு அவ்வளவு நேர்த்தியாக கொண்டு வந்திருக்கக்கூடிய நமது கவிஞர் நெல்லை ஜெயந்தா அவர்களுக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் நமது கவிஞர் நெல்லை ஜெயந்தா பற்றி எழுதியிருக்கிறார்கள். அவரது ‘தென்றலோடு சில தினங்கள்’ என்ற தொகுப்பை படித்துவிட்டு தொகுப்பிலே வந்திருக்கக்கூடிய கவிதைகளை பாராட்டி அவருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்.

**கலைஞர் எழுதிய கடிதங்கள்!**

தலைவர் எழுதக்கூடிய கடிதங்கள் முரசொலியிலும் வெளிவரக்கூடிய கடிதங்கள் தான். நேரில் பார்க்காத ஒரு இளைய கவிஞருடைய கவிதைகளை பாராட்டி தலைவர் கலைஞர் அவர்கள் சிலாகித்து எழுதி இருக்கிறார். அந்த இளைஞர் தான் இன்று கலைஞரின் பாடல்களை தொகுத்து புத்தகமாக வெளியிட்டு இருக்கிறார். இது ஒரு அற்புதமான மகிழ்ச்சியான நிகழ்வாக அமைந்திருக்கிறது.

அந்த தொகுப்பில் கலைஞர் அவர்கள் உதாரணமாக எடுத்துக் காட்டி இருக்கக்கூடிய எனக்கு பிடித்த அழகான வரிகள்.... ‘மனிதர்கள் தங்களை தொலைத்து விட்டு இறைவனைத் தேடுகிற இடம்தான் கோவில்’. தன்னை தொலைத்த இடத்தில் வேறு எதையோ தேடிக் கொண்டிருக்கிறோம். இப்படி அரசியல் அதை தன தாக்கி கொண்டு நம்மை சுரண்டிக் கொண்டிருக்கிறது என்பதையும் மிக அழகாக இந்த வரிகளில் அவர் எழுதியிருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்களின் பாடல்களை இந்த தொகுப்பில் பார்க்கும் போது இன்றைக்கும் அவரைப் போல் வேறு யாராவது எழுத முடியுமா என்று சிந்திக்க வேண்டிய ஒரு சூழலில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

சாமியார்களைப் பற்றி சில வரிகளை தலைவர் கலைஞர் ஒரு பாடலில் எழுதியிருக்கிறார். திரைப்படங்களிலும் வெளிவந்திருக்க கூடிய வரிகள் தான் அவை. அந்த வரிகளை இன்றைக்கு எழுதினார்கள் என்றால் நிச்சயமாக நிறைய பேருடைய மனசு மிகவும் வேதனைப்படும். வழக்கு போடுவார்கள், நிறைய பிரச்சினைகள் நடக்கும்.

**இந்தப் புத்தகம் எழுப்பிடும் கேள்வி!**

எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் எழுதப்பட்டு திரைப்படங்களில் வெளிவந்த அந்த பாடல்களைப் பற்றி இன்றைக்கும் பேசுகிற சூழலில் நாம் இருக்கிறோம்.



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் நமக்காக உருவாக்கி வைத்திருந்த ஒரு இடம் உரையாடல்கள், கருத்துப் பரிமாற்றம், வெளிப்படை தன்மையோடு எதிர்த்து கேட்கக் கூடிய ஒரு சூழல் அவற்றை நாம் எங்கே தொலைத்து விட்டோம் என்ற கேள்வியைத்தான் இந்த புத்தகம் எனக்குள் எழுப்பிக் கொண்டிருக்கிறது.

பராசக்தியிலே எழுதப்பட்டிருக்கக் கூடிய வரிகளையே, இன்றைக்கு நான் மேடையிலே திருப்பி சொன்னால் கூட வழக்கு போடுவார்கள்.

அன்று அவர்கள் உருவாக்கித் தந்த இடத்தை எதற்காக நாம் நெகிழ்த்திக் கொண்டோம் என்று எனக்குத் தெரியவில்லை. அந்த நெகிழ்தல், அந்த சுருங்குதல் தான் இன்று நாம் நின்று கொண்டிருக்கக் கூடிய இடத்திற்கு நம்மை கொண்டு வந்து தள்ளி இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞர் நூற்றாண்டு வழியாக நமக்கு தரக்கூடிய செய்தி இதைத்தான் என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு பக்கத்திலும் எதையும் உடைத்து பேசக்கூடிய வரிகள்.

**வாழும் சூழலை மாற்றுவதே நோக்கம்!**

இந்த சமூகத்திலே சிந்தனையாளர்கள் யாராக இருந்தாலும் ஒரு மதத் தலைவராக இருந்தாலும் அப்போது இருக்கக்கூடிய சூழலை எதிர்த்து கேள்வி கேட்டவர்கள் தான். அப்போது தன்னைச் சுற்றி வாழ்ந்திருந்தவர்களின் மனதை கஷ்டப்படுத்தியவர்கள் தான். அவர் கள்தான் சிந்தனையாளர்களாக இருந்திருக்கிறார்கள். தாங்கள் வாழும் சூழலை மாற்ற வேண்டும் என்பதுதான் சிந்தனையாளர்களாக இருந்தாலும் விஞ்ஞானிகளாக இருந்தாலும் அவர்களின் நோக்கமாக இருந்திருக்கிறது.

கலிலியோ முதலில் இந்த பூமி தட்டையானது இல்லை என்று சொன்னபோது நிறைய பேருடைய மனதை புண்படுத்தினார். இன்றைக்கு பூமி தட்டையாக இருக்கிறது என்று சொன்னால் சொன்னவனை முட்டாள் என்று சொல்கிறோம்.

ஆனால் இன்றைக்கு நாம் சொல்லலாமா சொல்ல முடியுமா என்ற சிந்தனையை மனதில் உருவாக்குவதிலே கூட ஒரு அச்ச நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இங்கேயே ஒரு உதாரணம் இருக்கிறது. மியூசிக் அகாடமி விருதுகள் அறிவிக்கப்பட்டபோது டி.எம். கிருஷ்ணாவின் சங்கீதத்தை யாரும் கேள்வி கேட்கவில்லை. அவருக்கு பாடத் தெரியாது, ஞானம் இல்லை என்று யாரும் சொல்லவில்லை. அவருடைய கருத்துகளை எதிர்க்கிறார்கள். சங்கீத கலாநிதி என்பது பாடுவதற்காகத்தான் கொடுக்கிறார்கள். பெரியாருக்கு பாடத் தெரிந்திருந்தால் அவருக்குக் கொடுக்கக் கூடாது என்று இருக்கிறதா?

அதனால் இப்படிப்பட்ட ஒரு நிலையில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில்தான் தலைவர் கலைஞரின் எழுத்துகள் நமக்குத் தேவை.

**மீண்டும் படிக்கிறபோது தைரியம் தோன்றுகிறது!**

அண்ணன் திருநாவுக்கரசு சொன்னதுபோல... தலைவர் கலைஞரின் எழுத்துகளை மீண்டும் படிக்கிறபோது அன்றைக்கு அவருக்கு இருந்த தைரியம், இத்தனை விஷயங்களை தெரிந்துகொண்டதால்தான், ‘இழப்பதற்கு எதுவும் இல்லை’ என்ற தைரியம் பிறக்கிறதோ என்று தோன்றுகிறது.

சுயமரியாதை, மொழிப் பற்று, நம், முடைய அடையாளங்களில் எதை தூக்கிப் போட வேண்டும், எதை வைத்துக் கொள்ள வேண்டும், எது மனிதத் தன்மைக்கு உகந்தது, எது தேவையில்லாதது என்ற தெளிவு அவருக்கு இருந்திருக்கிறது. அந்தத் தெளிவைப் பெறுவதற்கு அவரை எது இயக்கியது என்பதை நாம் புரிந்து கொண்டாலே... நிச்சயமாக இந்த மேடையை எல்லாருக்கும் உரிய மேடையாக எதையும் பேச முடியும் என்ற மேடையாக மறுபடியும் தமிழ்நாடு, இந்திய நாடு என்பது... நமது

எந்த கருத்தையும் வெளிப்படுத்தும் உரிமை உள்ள சூழலில் இருக்கும்.

தலைவர் கலைஞரின் வாழ்க்கை முழுதும் அவருக்கு வராத எதிர்க்கருத்துகள் கிடையாது. அதற்கு அவரது உச்சபட்ச பதில் முரசொலியில் ஒரு கடிதம். நிறைய தலைவர்கள் என்னென்ன பண்ணினார்கள் என்று நமக்குத் தெரியும்.

ஆனால் கலைஞர், ‘நீ என்னைப் பற்றி மேடையில் பேசுகிறாயா... எழுதுகிறாயா... என்னை ப் பற்றி தவறாக சொல்கிறாயா? அதற்கு என்னால் விளக்கம் தர முடியும்’ என்று தன்னால் மிகச் சிறப்பாக செய்ய முடிந்த எழுத்து வடிவத்தின் வழியாக பதிலளித்தார். பேசினால் பேசு... எழுதினால் எழுது. இதுதான் அவரது பதில்.

காஞ்சித் தலைவன் என்ற படத்தில் வெல்க காஞ்சி வெல்க காஞ்சி என்று பாடல் வரும். சென்சார் போர்டில் தனிப் பிறவிகளான மனிதர்களை எடுத்து நியமித் திருப்பார்கள்.

**நெல்லை ஜெயந்தாவுக்கு நன்றி!**

காஞ்சி என்று வந்தால் அது அண்ணாவை குறிக்கிறார்கள் என்று தெரிந்துவிடும் என்று அந்த பாடலில் காஞ்சி என்ற வார்த்தையை எடுத்துவிட்டார்கள். அதற்கு பதிலாக வெல்க நாடு வெல்க நாடு என்று போட்டிருப்பார்கள். படத்தின் பெயரே காஞ்சித் தலைவன். ஆனால் பாட்டில் காஞ்சி என்று வரக் கூடாது என்ற ஒரு நிலைமை இருந்தது.

ஆனாலும் இதைத் தாண்டி அவர்கள் சிந்தித்தார்கள். இந்த நெருக்கடிகளை தகர்த்தெறிந்தார்கள். நாமும் தகர்த்தெறியவேண்டும். அதற்கு வழிகாட்டியாக இருப்பவை தலைவர் கலைஞரின் எழுத்துகள். அதை தொகுத்து நம் கைகளில் ஒப்படைத்திருக்கக் கூடிய நெல்லை ஜெயந்தா அவர்களுக்கு மீண்டும் எனது நன்றி”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றினார்.

நிகழ்வில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திராவிட இயக்க வரலாற்று ஆய்வாளர் திருநாவுக்கரசு, சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் விஜயா தாயன்பன், எழுத்தாளர் நெல்லை ஜெயந்தா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், கும்பகோணம் மாநகராட்சி, ஏ.ஆர்.ஆர் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், இலவச சிறப்பு மருத்துவ முகாமில், நமது கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் கலந்து கொண்டு, தலைமை வகித்து, திட்டத்தை தொடங்கி வைத்து, பார்வை குறைபாடு உள்ள மாணவ மாணவிகளுக்கு கண் கண்ணாடிகளையும், கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் வழங்கினார். நிகழ்ச்சியில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயரும், மாநகர தி.மு.க. செயலாளருமான சு.ப.தமிழழகன், மாநகராட்சி ஆணையர் இரா.லெட்சுமணன், மாநகர் நல அலுவலர் கே.ஆடலரசி, பகுதி தி.மு.க. செயலாளர் டி.வி.கிருஷ்ணமூர்த்தி, நிலை குழு தலைவர்கள் டி.ஆர்.அனந்தராமன், ஆர்.முருகன், மாமன்ற உறுப்பினர்கள் ஏ.சாகுல் அமீது, என்.சரவணன், வட்டக் கழக செயலாளர்கள் டி.பி.எஸ்.சீனிவாச ராஜன், துமை ராஜ் மற்றும் மருத்துவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு முன்னாள் நகர மன்ற உறுப்பினர்

## கே.ஜி.எம்.பாவா (எ) முகமது ஆசாத் ஏழாம் ஆண்டு நினைவு நாள்!

### திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மாலை அணிவிப்பு!

*ஈரோடு, ஜூலை 23-*

*ஈரோடு முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கேஜிஎம். பாவா (எ) முகமது ஆசாத் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.*

*இவர் கழகத்தில் பல்வேறு பொறுப்புகளிலும், கூட்டுறவு சங்க நிர்வாகியாகவும் பொறுப்பு வகித்தார். மேலும் கழகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றவர், கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் தவறாமல் கலந்து கொண்டு சிறை*



*சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இவரது மகன் கே.ஜி.எம். தம்பி (எ) குலாம் உசேன் ஈரோடு தெற்கு மாவட்டம், மாநகர மீனவர் அணி தலைவராக கழக பணியாற்றி வருகிறார்.*



நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் அருகே உள்ள ஜெய் கண்ணம்மாள் கல்வி நிலையத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் மு.க.ஸ்டாலின் அவர்களின் காலை உணவுத் திட்டத்தை மாணவ, மாணவிகளுக்கு உணவு வழங்கி கே.இ.பிரகாஷ் எம்.பி. திட்டத்தினை துவக்கி வைத்தார்.